DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No:160/2023**

**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness -19 (LW -25)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.மோகன்ராஜ்** | Caste | : |
| Father Name | : **திரு.வெள்ளைசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **29.01.2026.**

**PW -19 (LW -25 )**

**(1, 2** எதிரிகள் ஆஜர்**. 3-**வது எதிரி ஆஜர் இல்லை**.** பிரிவு **355** பிஎன்எஸ்எஸ் மனு அனுமதி**.)** **(**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்**.)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 10.06.2021-ம் தேதி தொட்டியம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது காட்டுப்புத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சசிகலா என்பவர் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை குற்ற எண்.204/2021 வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக பெற்று கொண்டேன்.

சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்பு தயார் செய்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.18**. வரைபடம் **அ.த.சா.ஆ.19**. பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் ரத்தம் படிந்த பச்சை நிற துண்டு **சா.பொ.5**, ரத்தம் படிந்த தென்னை ஓலை **சா.பொ.6** ஆகியவற்றை

II ADJ COURT TRICHY

MADURAI BENCH OF MADRAS HIGH COURT

கைப்பற்றியதற்கான மகஜர் **அ.த.சா.ஆ.20** ஆகும். 1–வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அவரை கைது செய்த பின் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கடப்பாறை, அருவாள், சவுக்கு கட்டை (2 அடி), டிவிஎஸ் எக்ஸ்சல் சூப்பர் இரு சக்கர வாகனம் ஆகியவற்றை கைப்பற்றியதற்கான மகஜர் **அ.த.சா.ஆ.21** ஆகும்.

கைப்பற்றிய பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அதற்கான படிவங்கள் **அ.த.சா.ஆ.22 மற்றும் அ.த.சா.ஆ.23** ஆகும். கடந்த 06.07.2021–ம் தேதி வழக்கில் காயம்பட்ட நபர் செல்லப்பன் என்பவர் இறந்துவிட்டதால் இந்த வழக்கை இதச பிரிவு 302–யை சேர்த்து மாற்றி அமைத்த அறிக்கை **அ.த.சா.ஆ.24** ஆகும். பின்பு இறந்த செல்லப்பன் மீது செய்த பிரேத விசாரணைக்கான அறிக்கை **அ.த.சா.ஆ.25** ஆகும். பின்பு அவரது பிரேதத்தை உடற்கூறாய்வுக்கு அனுப்பி வைப்பதற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.26** ஆகும்.

பின்பு மருத்துவ சாட்சிகள் மற்றும் தடய ஆய்வக சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.09.2021–ம் தேதி 2–வது எதிரி நல்லம்மாள் காவல் நிலையத்தில் சரணடைந்தவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 20.09.2021–ம் தேதி 1 மற்றும் 3 எதிரிகளுக்கு 294(பி), 323, 302 மற்றும் 506(2) இதசவின் படியும், 2–வது எதிரிக்கு 302, 506(2) இதச வின் படி சட்டப்பிரிவு மாறுதல் செய்து 294(பி), 323, 302, 506(2) இதசவின் படி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.27** ஆகும்.

பின்பு எனது வழக்கின் விசாரணையை முடித்து 29.09.2021–ம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எ.த.கு.வி**</u> **:**

| | |
|---|---|
| **கேள்வி** | முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் உதவி ஆய்வாளர் சசிகலா எத்தனை மணிக்கு உங்கள் பார்வைக்கு வைத்தார் என்றால்? |
| **பதில்** | காலை 10.45 மணிக்கு. |
| **கேள்வி** | காயம்பட்ட செல்லப்பன் 09.06.2021 அன்று இரவு மாருதி மருத்துவமனை மற்றும் தங்கம் மருத்துவமனை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்ட விவரத்தை முதல் தகவல் அறிக்கையை உங்களது பார்வைக்கு வைக்கப்பட்டபோது தெரிந்து கொண்டீரா? |
| **பதில்** | தெரிந்து கொண்டேன். |
| **கேள்வி** | மாருதி மருத்துவமனை மற்றும் தங்கம் மருத்துவமனையில் இருந்து 09.06.2021 அன்று இரவு எத்தனை மணிக்கு செல்லப்பன் அனுமதிக்கப்பட்ட தகவல் நிலையத்தில் பெறப்பட்டது என்ற விவரம் தெரிந்து கொண்டீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு எடுத்து சென்ற போலீசாரை நீங்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா? |
| **பதில்** | விசாரிக்கவில்லை. |
| **கேள்வி** | 10.06.2021 அன்று காலை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் முதல் அறிக்கை மறுநாள் காலை 08.40 மணிக்கு நீதிமன்றத்தில் பெறப்பட்டதாக நீதிபதி பதிவு செய்துள்ளார் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | மேற்படி காலதாமதமாக முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு சார்வு செய்த காரணத்தை உதவி ஆய்வாளர் உங்கள் விசாரணையில் சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | வழக்கின் புகாரில் செல்லப்பனின் கையெழுத்தோ, கைரேகையோ இல்லை என்ற விவரம் உங்கள் கவனத்திற்கு வரவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இந்த வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு 11.06.2021 அன்று காலை 07.00 மணிக்கு மேல் வழக்கிற்கேற்ப ஜோடிக்கப்பட்டுள்ளது என்றாலும், அவ்வாறு ஜோடிக்கப்பட்ட புகாரில் செல்லப்பனின் கையெழுத்து செய்யப்படவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | சம்பவ இடம் பற்றி புகாரில் செல்லப்பனின் வயல் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்? |

HIGH COURT TRICHY

| | |
|---|---|
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் சம்பவ இடம் சென்ற பொழுது சம்பவ இடத்தை உங்களுக்கு யார் அடையாளம் காட்டியது? |
| **பதில்** | சுப்பிரமணியன். |
| **கேள்வி** | சுப்பிரமணியன் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தை உங்களுக்கு அடையாளம் காட்டியதாக சொல்லப்படவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் பார்வை மகஜரிலும், மாதிரி வரைபடத்திலும் சம்பவ இடமானது செல்லப்பன் தோட்டத்திற்கு செல்லும் வண்டி பாதை என்று காட்டியுள்ளீர்கள் என்றால்? |
| **பதில்** | செல்லப்பனின் வயல் அதன் தொடர்ச்சியாக வண்டி பாதையையும் காட்டியுள்ளேன். |
| **கேள்வி** | புகாரில் வண்டி பாதையில் வைத்து தாக்கியதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் சம்பவ இடம் சென்று பார்க்கும் பொழுது செல்லப்பனின் வயலிலோ, வண்டி பாதையிலோ ரத்தகறை எதுவும் காணப்படவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | பார்வை மகஜரிலும், மாதிரி வரைபடத்திலும் சாபொ.5, சா.பொ.6 பச்சை துண்டு, தென்னை ஓலை ஆகியவை எந்த இடத்தில் இருந்தது என்று குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால்? |
| **பதில்** | சம்பவ இடம் என்று குறிப்பிட்டுள்ளேன். |
| **கேள்வி** | பச்சை நிற துண்டை நீங்கள் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் விசாரித்த சாட்சிகள் யாரும் அவர்களுடைய வாக்குமூலத்தில் பச்சை துண்டை யார் வைத்திருந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | பார்வை மகஜரில் குற்ற எண், சட்டப்பிரிவுகள் ஆகியவை சொல்லப்படவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | பார்வை மகஜரில் நேரம் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால்? |

| | |
|---|---|
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | பார்வை மகஜரில் துண்டு, தென்னை ஓலை கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | பார்வை மகஜர், மாதிரி வரைபடம், அ.த.சா.ஆ.20 மகஜர் மற்றும் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் தடய பொருட்கள் பின்பு வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து ஜோடிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | 10.06.2021 அன்று காயம்பட்ட செல்லப்பனை எத்தனை மணிக்கு விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தீர்கள் என்றால்? |
| **பதில்** | ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | நீங்கள் செல்லப்பனை பார்த்த பொழுது தங்கம் மருத்துவமனையில் சாதாரண சிகிச்சை பிரிவில் இருந்தாரா அல்லது தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தாரா? |
| **பதில்** | ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | நீங்கள் செல்லப்பனை விசாரித்ததாக சொல்லும் சமயத்தில் அவர் தீவிர சிகிச்சை பிரிவில் தான் இருந்தார் என்றாலும், அவரை நீங்கள் விசாரணை செய்யாமல் அவரது வாக்குமூலத்தை மட்டும் வழக்கிற்கேற்ப பின்னிட்டு ஜோடித்துள்ளீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | புகாரிலும், செல்லப்பன் வாக்குமூலத்தில் மூத்த மகன் சுரேஷ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | பின்னிட்டு வழக்கு விசாரித்த பொழுது அவருடைய மூத்த மகன் ரமேஷ் என்று தெரிந்ததால் ரமேஷிடம் தான் வாக்குமூலம் பெற்றுள்ளீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் செல்லப்பனை மருத்துவமனையில் சென்று பார்த்த பொழுது சம்பவ சமயத்தில் அவர் அணிந்திருந்த ரத்தகறை படிந்த உடைகளை நீங்கள் கைப்பற்றவில்லை என்றால்? |
| **பதில்** | பின்னிட்டு தருவதாக சொன்னார். ஆனால் தரவில்லை. |
| **கேள்வி** | நீங்கள் அவ்வாறு ரத்தகறை படிந்த உடைகளை கைப்பற்றவில்லை என்றாலும், தற்பொழுது மேற்கண்டவாறு பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் எனறாலும்? |

HIGH COURT OF JUDICATURE AT MADRAS



| | |
|---|---|
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | புகாரிலும், செல்லப்பன் வாக்குமூலத்திலும் சம்பவத்திற்கு பிறகு மூன்று எதிரிகளும் இரு சக்கர வாகனத்தில் சென்றதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | குறிப்பிட்டு வண்டியில் சென்றதாக சொல்லவில்லை. |
| **கேள்வி** | அ.சா.1 சுப்பிரமணி, அ.சா.3 சதீஷ் ஆகியோர் 10.06.2021 தேதியிட்ட வாக்குமூலத்தில் தேதி மாதம் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | தட்டச்சு பிழை என்பதால் திருத்தி எழுதப்பட்டுள்ளது. |
| **கேள்வி** | அ.சா.1 சுப்பிரமணி உங்களது விசாரணையில் இந்த சம்பவம் தன்னுடைய வயல் காட்டில் நடந்ததாக சொல்லியுள்ளாரா? |
| **பதில்** | சம்பவ இடத்தில் ஆரம்பித்து அவரது வயல்காட்டில் முடிந்ததாக சொல்லியுள்ளார். |
| **கேள்வி** | சுப்பிரமணி வயல் காட்டில் நடந்ததாக பார்வை மகஜரிலும், வரைபடத்திலும் குறிப்பிடப்படப்படவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | 1–வது எதிரியும், 3–வது எதிரியும் தன்னை கீழே தள்ளிவிட்டதாக அ.சா.1 சுப்பிரமணி உங்கள் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | கையால் அடித்தார் என்று சொல்லியுள்ளார். |
| **கேள்வி** | கீழே தள்ளிவிட்டதாக நீங்கள் ஏதும் பதிவு செய்துள்ளீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | அ.சா.2 பெரியசாமி, த/பெ.செல்லப்பகவுண்டர் என்பவரை எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்கள் என்றால்? |
| **பதில்** | 07.07.2021 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். |
| **கேள்வி** | இந்த வழக்கில் 1–வது எதிரியை கைது செய்தபோது சாட்சியாக இருந்த பெரியசாமி என்பவரும், அ.சா.2 பெரியசாமியும் ஒரே நபரா அல்லது வேறு வேறு நபர்களா என்றால்? |
| **பதில்** | ஒரே நபர்தான். |
| **கேள்வி** | அவர் 10.06.2021 அன்று உங்கள் விசாரணையில் சம்பவத்தை கண்ணுற்றதாக மேற்படி பெரியசாமியின் வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அ.சா.3 சதீஸ் என்பவரின் 10.06.2021 தேதியிட்ட வாக்குமூலத்தில் உங்கள் விசாரணையில் எந்த எதிரி எந்த ஆயுதத்தை வைத்து எப்படி தாக்கினார் என்று சொல்லவில்லை என்றால்? |

| | |
|---|---|
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அ.சா.3 சதீஸ் உங்கள் விசாரணையில் சம்பவ சமயத்தில் செல்லப்பன் என்ன உடை அணிந்திருந்தார் என்றும், எதிரிகள் என்ன உடை அணிந்திருந்தார்கள் என்றும் சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அ.சா.3 சதீஸ் என்பவர் உங்கள் விசாரணையில் ஆயுதங்களின் அளவுகள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அ.சா.4 ரமேஷ் என்பவரை 07.07.2021 அன்று தான் முதன் முறையாக விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அ.சா.4 ரமேஷ் உங்கள் விசாரணையில் தன் அப்பா மாருதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தகவல் கேள்விபட்டு அங்கு வந்து பார்த்ததாக சொல்லியுள்ளார் என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இந்த வழக்கில் மாருதி மருத்துமவனையில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லும் விபத்து பதிவேட்டில் "உடன் வந்தவர் ரமேஷ்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அ.சா.4 ரமேஷ் உங்கள் விசாரணையில் தன் அப்பாவை தான் மாருதி மருத்துவமனையில் அனுமதித்ததாக சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இறந்து போன செல்லப்பனின் மகனான அ.சா.6 ஆனந்த், அ.சா.10 சுப்பிரமணி ஆகியோர்களை 07.07.2021-ம் தேதி அன்று தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்கள் என்றாலும், அதற்கு முன்பு அவர்களை நீங்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | 1-வது எதிரியை கைது செய்யப்பட்டதாக சொல்லும் இடமான உன்னியூர் காந்தி சிலை பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | 1-வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால்? |
| **பதில்** | ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | எதிரிகளின் வீடு சுள்ளிபாளையம் மெயின்ரோட்டில் உள்ளது என்றால்? |

JUDICIARY

MADURAI BENCH OF MADRAS HIGH COURT,

| | |
|---|---|
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அவர்களுடைய வீட்டிற்கு முன்புறம் இருந்து தான் ஆயுதங்களும், வாகனமும் கைப்பற்றப்பட்டது என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரிந்து கொண்டீர்களா? |
| **பதில்** | ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | நீங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் எக்ஸ்சல் டிவிஎஸ் வாகனம் எதிரிகளுக்கு சொந்தமானது இல்லை என்றாலும், அவர்கள் அதனை எந்த காலத்திலும் பயன்படுத்தியதே கிடையாது என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | நீங்கள் குறிப்பிட்டுள்ள வாகனத்தின் பதிவு எண்ணிற்கும், அந்த வாகனத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | 1–வது எதிரியை சொன்ன நாள், சொன்ன நேரம், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் ஆயுதங்கள் மற்றும் தடய பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | தங்கம் மருத்துவமனையின் விபத்து பதிவேட்டை நீங்கள் பெறவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இந்த வழக்கில் மாருதி மருத்துவமனை, தங்கம் மருத்துவமனை மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு மருத்துவரிடம் கேட்டு கொண்டு வழக்கிற்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | காயம்பட்ட செல்லப்பனுக்கு மாருதி மற்றும் தங்கம் மருத்துவமனைகளில் எடுக்கப்பட்டதாக சொல்லும் சிடி ஸ்கேன் மற்றும் அதனுடைய அறிக்கை எதையும் பெறவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | சட்ட மாற்று அறிக்கையில் காயம்பட்ட செல்லப்பன் 19.06.2021 அன்று தங்கம் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆனதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |

| | |
|---|---|
| **கேள்வி** | சட்டப்பிரிவு மாற்று அறிக்கையில் வீட்டில் இருந்தவர் நெஞ்சு வலி காரணமாக 06.07.2021-ம் தேதி அன்று நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | இந்த வழக்கில் இறந்துபோன செல்லப்பனின் இறப்பிற்கும், எதிரிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | சிகிச்சையில் இருந்து வந்த பிறகு வீட்டிற்கு வந்த செல்லப்பன் நெஞ்சு வலி ஏற்பட்டு அதன் காரணமாக மருத்துவ சிகிச்சைக்கு சென்றவர் தன்னடைய உடலில் உள்ள அவயங்கள் செயல் இழப்பால் உயிரிழந்துள்ளார் என்றாலும், ஆனால் செல்லப்பனின் குடும்பத்தினர் கொடுத்த அழுத்தம் காரணமாக எதிரிகள் மீது கொலை வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | வழக்கின் ஆவணங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் தடய பொருட்கள் அனைத்தும் பின்னிட்டு வழக்கிற்கேற்ப காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர் என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 29.01.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 29.01.2026

III ADJ COURT, TRICHY